பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

UTHAYAN

விலை ரூபா 3·50

சுடர்: 5 பிரமோதூத ஸூ ஐப்பசி மீ 05 உ. திங்கட்கிழமை (22 - 10 - 1990) ஹிஜ்ரி 1410 ற. அவ்வல் 31 கதிர்: 229

### பலாலியிலிருந்து காங்கேசன் நோக்கிச் சென்ற

# படை அணிகள் 2 இடங்களில் புலிகளினால் சுற்றிவளைப்பு!

## 5ஆவது நாளாக தொடர்ந்து மோதல்

யாழ்ப்பாணம், அக். 22

பலாலி இராணுவ முகாமிலிருந்து வெளியேறி காங்கேசன் துறை திஸ்ஸ விகாரை முகாமை நோக்கிச் செல்ல முற்பட்ட ஸ்ரீலங்கா படை அணிகளை இரு இடங்களில் விடுதலைப் புலிகள் சுற்றிவளைத் திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வலி. வடக்குப் பகுதியில் நேற்று ஐந்தாவது நாளாகத் தொடர்ந்து கடும் சண்டை நடைபெற்றது.

பலாலி இராணுவ முகாமிலிருந்து வெளியேறி, பலாலி — காங்கேசன்வீதி வழியாக காங்கேசன் முகாமை நோக்கிச் செல்ல முற்பட்ட படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் ஆவளைச் சந்திப் பகுதியில் கடும் மோதல் நடைபெற்றது தெரிந்ததே

அங்கு சென்ற படை அணி மேலும் முன்னேறி அங்கிருந்து திஸ்ஸ விகாரை முகாமுக்கு நேற்றுச் செல்ல முற்பட்டபோது காங்கேசன் ரயில் நிலையப் பகுதியில் வைத்து அவர்களை வழி மறித்து, விடுதலைப் புலிகள் சுற்றிவளைத்திருப்பதாகத் தெரியவந்தது.

இதேசமயம் —

பலாலி முகாமிலிருந்து வெளியேறி மயிலிட்டி — மாவிட்டபுரம் வீதி வழியாக முன்னேறிய படை அணி ஒன்றும் விடுதலைப் புலிகளினால்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வலி. வடக்கில் நேற்றும் பரவலாக குண்டு வீச்சு!

தெல்லிப்பழை, அக். 22

வலி- வடக்குப் பகுதியில் நேற்றும் காலையில் இருந்து மாலை வரை பொம்மர், சீனச்சகடை, அவ்ரோ ஆகியவற்றிலிருந்து குண்டு வீச்சுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் சிமெந்து தொழிற்சாலைக் கட்டடங்களும் பல வீடுகளும் சேதமடைந்தன.

நேற்று அதிகாலை வழமை போல் சீனச்சகடை விமானம் தனது அழிவுப் பணியை மேற்கொண்டது.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கு அருகில் வீசப்பட்ட குண்டினால் ஐந்து வீடுகள் பலத்த சேதமடைந்தன.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கட்டுவன் பகுதியில் நேற்று ஷெல் வீச்சுக்கு ஒருவர் பலி

கட்டுவன் பகுதியில் நேற்று ஷெல் வீச்சுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்தார்.

கட்டுவனில் இருந்து பாதுகாப்புக் கருதி அவசர, அவசரமாக மக்கள் பலர் வெளியேறிக் கொண்டிருந்தபோது, இவர் வீதியில் ஓடிக்கொண்டிருந்த வேளை ஷெல் வீச்சுக்கு இலக்கானார்.

பலியானவரின் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் வீதியில் கிடக்கக் காணப்பட்டது. (ஒ-15)

## கட்டுவன், மயிலிட்டியில் கடும் சமர்!

தெல்லிப்பளை, அக். 22

கட்டுவன் சந்தியில் நிலை கொண்டுள்ள படையினர் நேற்று மேலும் முன்னேற முயன்றனர். அப்போது விடுதைப் புலிகள் படையினர் மீது கடும் தாக்குதல் தொடுத்தனர். தாக்குதல் மாலை வரையும் தொடர்ந்தது.

இந்தப் பகுதி துப்பாக்கி வேட்டுச் சத்தங்களாலும், ஷெல் சத்தங்களினாலும் அதிர்ந்தது.

கட்டுவன் சந்தியில் வீடுகளிலும், ஞானோதயா வித்தியாசாலைப் பகுதியிலும் நிலை கொண்டுள்ள படையினரே முன்னேற முயற்சித்துள்ளனர்.

இதனிடையில்—

நேற்றுப் பகல் ஒரு மணி அளவில் மயிலிட்டி கிராம நீதிமன்றப் பாதையாலும் படையினர் முன்னேற முயன்றனர்.

இந்தப்படை அணியினரும்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அரியாலைப் பகுதியில் பொம்மர் திடீர் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், அக். 22

அரியாலைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற திடீர் பொம்மர் குண்டு வீச்சில் அரியாலையில் தற்காலிகமாக இயங்கி வந்த யாழ். பலநோக்குக் கூட்டுறவுச்சங்க தலைமையகம் சேதமடைந்தது.

நேற்றுப்பகல் வந்த பொம்மர் ஒன்று அரியாலைப் பகுதியைச் சுற்றி வட்டமிட்டு இரண்டு குண்டுகளை வீசியது. இரண்டு குண்டுகளும் அரியாலைப் ப. நோ. கூ. சங்கக் கட்டடத்தின் பின்புறமாக உள்ள வளவில் விழுந்து வெடித்தன.

இதனால் அப்பகுதியில் பல தென்னை மரங்கள் முறிந்து விழுந்தன. ப. நோ. கூ. சங்கக் கட்டடத்தின் கூரை மற்றும் அங்கிருந்த மின்தறி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## திஸ்ஸ முகாம் படை மீது புலிகள் கடும் தாக்குதல்

காங்கேசன்துறை திஸ்ஸ முகாமிலிருந்து நேற்றுப்பகல் கீரிமலைப் பக்கமாக வெளியேறிய படையினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடத்தினர்.

படையினர் வெளியேறிய கையோடு கீரிமலைக் கடல் பகுதியில் இருந்து அடுத்தடுத்து பீரங்கி வேட்டுக்கள் கொல்லன்கலட்டி, கிளானை கருகம்பானை பகுதிகளை நோக்கி ஏவப்பட்டன,

விடுதலைப் புலிகள் சளைக்காமல் எதிர்த் தாக்குதல் நடத்தி, படையினரை முகாமுக்கு திருப்பி அனுப்பினர். (ஒ-3-68)

## ஆனையிறவிலும் மோதல்

யாழ்ப்பாணம், அக், 22

ஆனையிறவு முகாமில் இருந்தும் நேற்று நண்பகல் படையினர் வெளியேற முற்பட்டனர்.

இதனை அடுத்து கடும் மோதல் மூண்டது

விடுதலைப்புலிகள்முகாமை நோக்கி கடுமையான எதிர்த் தாக்குதலை நடத்தினர்.

இந்தத் தாக்நதலின்போது சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்,

விடுதலைப் புலிகள் தரப்பில் அப்பன் [பளை] என்ற போராளி வீரமரணமடைந்தார். (ஒ)

## ஒட்டோ மீது ஹெலி சூடு; சாரதி படுகாயமுற்றார்

யாழ்ப்பாணம், அக். 22

நோயாளியை ஏற்றிச் சென்ற ஓட்டோவை நோக்கி நேற்று சண்டிலிப்பாயில் ஹெலி தாக்குதல் நடத்தியது.

இச்சம்பவத்தில் ஓட்டோ சாரதியான கல்வியங்காட்டைச் சேர்ந்த குழந்தை தேவராசா (32 வயது) படுகாயமடைந்தார்.

காயமடைந்தவர் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-15)

## காரைநகர் முதல் காங்கேசன் வரை கரையோரப் பகுதிகளில் மாறிமாறி ஹெலி தாக்கு

காரைநகர்முதல் காங்கேசன்துறை வரையிலான கடற் கரையோரப் பிரதேசத்தில் நேற்றுக்காலை 7. 30 மணியில் இருந்து நண்பகல்வரை இரண்டு ஹெலிகள் மாறி மாறி மூர்க்கத்தனமான தாக்குதல்களை மேற்கொண்டன.

சேந்தாங்குளம், மயிலங்கூடல், வலித்தூண்டல், வாழ்வகம், கீரிமலை, இளவாலைப் பகுதிகளில் இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் பல வீடுகள் சேதமுற்றன.

காங்கேசன்துறை, பலாலி, கட்டுவன் முகாம்களில் இருந்து இந்தப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. (உ-3)

## குஜ்ரால் நவ.11 இல் கொழும்பு வருகிறார்

கொழும்பு, அக். 22

இந்திய வெளியுறவு அமைச்சர் இந்தர்குமார் குஜ்ரால் அடுத்த மாதம் (நவம்பர்) 11ஆம் திகதி கொழும்புக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்கிறார்.

நவம்பர் 13ஆம் திகதிவரை திரு. குஜ்ரால் தங்கியிருந்து இலங்கை அரசுத் தலைவர்களுடன் உயர்நிலைப் பேச்சுக்களை நடத்துவார் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர் குஜ்ரால் ஜனாதிபதிதிரு. ஆர். பிரேமதாசாவுடனும், மற்றும் முக்கிய அரசியல் தலைவர்கள் பலருடனும் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்தும் பேச்சுக்களை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுவதாக அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர். (ஒ-எ)

## மீனவர் மீது ஹெலித்தாக்கு!

குருநகர், அக். 22

நேற்றுக் காலை சேந்தான்குளம் கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த கடற்தொழிலாளர்கள் மீது ஹெலிகொப்டர் ஒன்று கலிபர் தாக்குதல் நடத்தியது.

இச்சம்பவத்தில் சேந்தான்குளத்தைச் சேர்ந்த செபமாலைநாயகம் (வயது 35) என்பவர் தமது கைவிரல் ஒன்றை இழந்தார். (உ-51)

## வெளியேற முடியாத மக்கள்

தெல்லிப்பளை, அக். 22

மாவிட்டபுரத்துக்கு அப்பால் குடியிருந்த மக்களில் சிலர் அங்கிருந்து தெல்லிப்பளைப் பகுதிக்கு வர முடியாமல் அங்கேயே தங்கி இருப்பதாக அறிய வருகிறது.

இப்பகுதிகளில் மோதல்கள் தொடர்வதாலும், வீதிகள் பல துண்டிக்கப்பட்டு விட்டதாலுமே அவர்கள் குறிப்பிட்ட பகுதிகளில் இருந்து வெளியேற முடியாது சிக்கி உள்ளனர். [ஒ-68]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாக்காலி நாய்களை ஒழிக்க உள்ளூராட்சி மன்ற ஒத்துழைப்பு

## சுகாதாரப் பணிப்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள கட்டாக்காலி நாய்களை ஒழிக்கும் பணிக்கு உள்ளூராட்சிச் சபைகளும், மாநகர சபையும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும்.

கோண்டாவிலில் உள்ள பிராந்தியசுகாதாரத்திணைக்களத்தில் நடைபெற்ற விசர் நாய்க்கடி நோய்த் தடுப்பு சம்பந்தமான கலந்துரையாடலில் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ந. கனகசபை மேற் கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் தற்போது அதிகரித்து வரும் விசர்நாய்க்கடி நோய் பற்றியும், அதற்கான காரணங்கள் பற்றியும், அதைத் தடுக்கும் வழிகள் பற்றியும் கடந்த வெள்ளி நடைபெற்ற இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

விசர்நாய்க்கடி நோய்க்கு பிரதான காரணமான கட்டாக்காலி நாய்களை ஒழிப்பதற்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும்—

குறிப்பாக ஆஸ்பத்திரிகள், சந்தைகள் மற்றும் பொது மக்கள் பெருமளவில் கூடும் இடங்களில் இந்தப் பணி உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் கூட்டத்தில் கேட்கப்பட்டது.

இதே சமயம் யாழ். மாவட்டத்துக்கு அனுப்பப்படும் விசர்நாய்க்கடி தடுப்பு மருந்தாகிய ஏ. ஆர். வி. வக்சீன் போதியதாக இல்லை எனவும்—

இதனை நிவர்த்தி செய்ய சுகாதாரத் திணைக்களம் தொண்டர் ஸ்தாபனங்களிடம் இருந்தும் ஏ. ஆர். வி வக்சினை நியாய விலையில் கொள்வனவு செய்வது எனவும் முடிவாகியது.

இதன் ஒரு கட்டமாக நாய்களுக்கும் தடுப்பு மருந்து ஏற்றும் பணியை மீள ஆரம்பிக்கவும் ஏற்பாடாகி உள்ளது. (இ-6)

## ஒயில் திருடியவர் பிடிபட்டார்

டிரான்ஸ்போமரில் இருந்து ஒயில் திருடியவர் பிடிபட்டார்.

மட்டுவில் கல்வயல் வீதியில் உள்ள விளைவேலி டிரான்ஸ்போமர் நிலையத்தில் இச்சம்பவம் இடம் பெற்றது.

ஒயிலுடன் நின்றவர் பிடிபட மற்றவர் சைக்கிளையும் போட்டுவிட்டு தப்பிச்சென்றுவிட்டார் என்று கூறப்படுகிறது.

பிடிபட்டவர் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப் பட்டார். (இ-31)

## வீர மரணம்

முல்லைத்தீவில் இராணுவத்தினர் வைத்த கண்ணி வெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவர் கண்ணி வெடி ஒன்று வெடித்ததில் வீர மரணமடைந்தார்.

பானு (அருளம்பலம் ரவிச்சந்திரன்) என்ற இந்தப் போராளி கடந்த புதனன்று வீர மரணமடைந்தார். (உ)

## திரை நீக்கம்

தமிழீழப் போராட்டத்தை கலை வடிவமாக்கி தந்த மக்கள் கலைஞரும் முன்னாள் சுன்னாகம் ப. நோ. கூ. சங்க ஊழியருமான வி. எம் குகராஜாவின் உருவப்படம் சுன்னாகம் ப நோ. கூ. சங்க தலைமைச் செயலகத்துக்கு அருகாமையில் திறந்து வைக்கப்பட்டது. (இ-89)

---

# ★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

### விற்பனைக்குண்டு

Work Bike மூன்று சில்லு சைக்கில் வண்டி பாரம் ஏற்றக் கூடியது. ''England Make'' தொடர்பு:- கா. சிவகுமார், உடையார் ஒழுங்கை, கொக்குவில். [14519]

### ''நிலவே நீ மயங்காதே''

மீரா வெளியீடு வன்னியூர் இந்திரா பிரியதர்ஷினி எழுதியது தவிக்கும் பெண்மனம், தடுமாறும் பெண்மனம், செய்வதறியாது திகைக்கும் பெண் மனங்களை இந் நாவலில் சந்தியுங்கம், துர்க்கா ஸ்ரேசனேர்ஸ், சுன்னாகம்; திருக்கணிதம், சாவகச்சேரி; பிக்பென்ஸ்(BJ, கிளிநொச்சி; ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர். [14503]

### ரதி வோச் வேக்ஸ் (Rathy Watch Works)

எமது ஸ்தாபனத்தில் திருத்த வேலைக்காக தந்த மணிக்கூடு வகைகளை இல. 12, பொன்னையா லேன், ஆறுகால் மடம், ஆனைக்கோட்டையில் பெற்றுக் கொள்ளவும்; திருத்துதல் வேலைகளும் நடைபெறுகின்றன என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். (யாழ் நகரில் மணிக்கூடுகள் திருத்துவதில் பிரசித்தி பெற்றவர்கள்) (14401)

### ஞானம்ஸ் ஸ்ருடியோ

மீண்டும் மேற்படி ஸ்தாபனம் தனது வழமையான சேவையை ஆரம்பித்துள்ளது. அத்துடன் போட்டோஸ்ரட் செய்து கொடுக்கப்படும் 301, பணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சி-5326)

### TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் மற்றும் தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் வேலைக்கும் Fudo Enterprises, பிரதான வீதி, மானிப்பாய், Bank - Siva Studio அருகாமையில். சி-5219)

### கல்வி

பழைய/புதிய கொம்பியூட்டர் பிரிவுகளும், Shorthand & Typing (English), C. I. M. A, I.D.P.M, I. A. B வகுப்புக்களும், விரைவில் ஆரம்பமாகவுள்ளன. விபரங்கள் நேரில்: தினசரி 9.00 - 12.00 மணிவரை: School Of Business Administrion, 16, 3rd Cross Street, Jaffna. [சி-5328]

### கிளீன் கட் போட்டோஸ்ரற்

தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளை உடனடியாகப் பெற்றுக் கொள்ளவும். அடையாள அட்டைகட்கு கவரிட்டு கொள்ளவும் கிளீன் கட் 37, சிவகுருநாதர் வீதி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் யாழ். இந்து மகளிர் சந்திக்கு அண்மையில். (14523)

---

## ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டாளர்

கொழும்பு. அக். 22

புதிய ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டாளராக திரு. ஆர். எஸ். சிவசுப்பிரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இதற்கு முதல் ஏற்றுமதி இறக்குமதிப் பிரதிக் கட்டுப்பாட்டாளராகப் பணிபுரிந்தார்.

வர்த்தக கப்பற்றுறை அமைச்சின் உதவிச் செயலாளராகவும் பணிபுரிந்த திரு. சிவசுப்பிரமணியம்சஞ்சோணி இணைக் குழுவின் செயலாளராகவும் பதவி வகித்தார். (அ)

---

## பொதுக்கூட்டம்

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் பரிபாலனசபையின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (28- 10- 90) பிற்பகல் 4 மணிக்கு கோவில் மண்டபத்தில் நடைபெறும் இக் கூட்டத்திற்கு அங்கத்தவர்களை மாத்திரம் சமூகம் கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இக் கூட்டத்தில் முக்கிய விடயமாக தற்போதைய சூழ்நிலையில் பொதுக்கூட்டம் நடத்தலாமா? என்பது பற்றி தீர்மானித்தல்.

நன்றி:

இங்ஙனம்:
ந. ஸ்ரீறஞ்சன்
செயலாளர்,
கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி
கோயில் பரிபாலனசபை.

(14522)

---

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்லத்துரை சுப்பிரமணியம்
(காப்பாளர் இ. போ. ச)

அன்னை மடியில்:
02 — 03 — 1937

இராவணன் அராலி முருகன் அடியில்:
05 — 11 — 1986

நாடி வந்த துணையே!
நடுவயதில் போனதேன்
அள்ளிக் கொடுத்தேன்
அடிவயிறு
நெருப்பிட்டேன்,
நாலாண்டு
சென்றாலும்
மாறாது உம் நினைவு!
நல்லூரானை
வேண்டுகின்றேன்
உமது சாந்திக்கு

பிரிவால் வாடும்:
மனைவி,
பெறாமக்கள்.

[1452]

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சுந்தரம்
வைகுந்தநாதன்

அன்னை மடியில்:
04 — 11 — 1942

அரக்கர் பிடியில்:
13 — 11 — 1988

திதி: 22 - 10 - 90

எங்கள் தலைவனே!
இனியவனே
அன்பின் வடிவமாய்-
எமை
ஆதரித்த உத்தமனே
அட்டூழியத்தின்
பிடியில் - நீர்
அகப்பட்டு எமைப்
பிரிந்து
ஈராண்டு சென்றாலும்
எம்
இதயப்புண் ஆறவில்லை

உம் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
சகோதரர்கள்,
மைத்துனர்கள்,
உற்றார், உறவினர்.

வளாக வீதி,
திருநெல்வேலி.

(14521)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



நாகையா
முருகேசு

(M. J ரவல்ஸ் உரிமையாளரும், பிரபல வர்த்தகரும்.)

மலர்வு: 10- 1- 1943
உதிர்வு: 2- 11- 1989

எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டு ஓராண்டு சென்றாலும் உங்கள் பாசம் என்றும் எங்களை விட்டுப் பிரியாது.

உங்கள் ஆத்மாசாந்தி அடைய ஆண்டவனை எந்நாளும் பிராத்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி,
பிள்ளைகள்.

அன்னை இல்லம்,

(14510)

---

## 3ஆவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
24 - 07 - 1934

மறைவு:
22 - 10 - 1987

கேசவன் கெங்காதரன்
(நாராயணன்)

ஆண்டு மூன்று ஆனாலும் ஆறாது எம்மனது
இன்றும் உங்களை எண்ணி
ஏங்கி நிதம் வாடுகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
மனைவி, மக்கள், மாமி, மருமகன்.

18, கலைப்புலவர் வீதி,
யாழ்ப்பாணம்.

[14518]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பஸ்தியாம்பிள்ளை சின்னப்பு
யோசெவ்

[ஸ்தாபகர் - சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்,
484. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்]

பிறப்பு:
21 - 02 - 1902

இயேசுவின் மடியில்.
22 - 09 - 1990

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கிறோம்.

ஊழியர்களும் அவர்களின்
குடும்பத்தாரும்.

[14524]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மண்டைதீவு ஆகஸ்ட் - 90

மண்டைதீவு. அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய பகுதிகளில் ஸ்ரீலங்கா இராணுவம் அகதி முகாம்களில் வைத்துக் கைது செய்த 71 தமிழர்களுக்கு என்ன நடந்தது என்று இன்னும் எதுவித தகவலும் இல்லை. கைதானவர்களின் தாய், தந்தையர். மனைவியர். பிள்ளைகள், உறவினர்கள் ஆகியோர் எங்கிருந்து தகவல் பெறுவது என்பது தெரியாமல் தவியாய்த் தவிக்கிறார்கள். அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா, இல்லையா, எங்குற்றார்கள் என்று நினைந்து, நினைந்து கண்ணீர் வடிக்கிறார்கள். ஊண் உறக்கமின்றி மனம் உருக்குலைந்து வாடுகிறார்கள்.

ஆகஸ்ட் மாதப் பிற்பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவம் முன்கண்ட மூன்று கிராமங்களிலும் தரை இறங்கிப் புரிந்த அக்கிரமங்களில் இதுவும் ஒன்று ஆகஸ்ட் 23 ஆம் திகதி முதல் செப்டம்பர் 6 ஆம் திகதிவரை 15—35 வயதெல்லைக்குள் அடங்கிய குறிப்பிட்ட 71 பேரும் கைது செய்யப்பட்டனர் இவர்களில் பெரும்பாலானவர்கள் இளைஞர்கள் சில குடும்பஸ்தர்களும் அடங்குவர். இவர்கள் இராணுவ அட்டூழியங்களுக்குப் பயந்து பாதுகாப்புக் கருதி தேவாலயங்களிலும் பள்ளிவாசலிலும் தஞ்சம் புகுந்திருந்த நிராயுதபாணிகள்— அப்பாவிகள்,

இராணுவம் தமிழ் மண்ணில் கால் பதித்தால் புரியும் அடாவடித் தனங்களில், அடிப்படை மனித உரிமை மீறல்களில் தமிழர்களை சந்தேகத்தின் மீது கைது செய்வதும் பின்னர் அவர்களைப் பற்றித் தங்களுக்குத் தெரியாது என்று கூறுவதும் ஒருவகை இவ்வாறு 1983 ஆம் ஆண்டின் பின்னர் ஆயிரம் ஆயிரம் தமிழர்களை காணாமற் போனவர்கள் பட்டியலில் அரச படையினர் சேர்த்து விட்டார்கள்.

ஓர் அரசாங்கம், ஓர் அரசமைப்பு. சட்டங்கள் நீதிமன்றங்கள் என்று எல்லாம் பெயருக்கு இருந்தும் மக்களைக் கொல்லும், காணாமற் போகச்செய்யும் இராணுவத்தினரை எதுவும் செய்ய முடியவில்லை; செய்யமுடியாது.

சனநாயகம், நீதி, நியாயம். மதசுதந்திரம், மனித உரிமைகள் என்பன வெறும் கேலிக் கூத்துகளாகிவிட்டன. அவை சாகடிக்கப்பட்டுவிட்டன என்பதே உண்மை. இராணுவத்துவமும் அராஜகமுமே மேலோங்கிச் செயற்படுகின்றன.

தமிழர்கள் நாட்டைப் பிரிப்பதை அனுமதிக்கப் போவதில்லை என்ற வெறியை, தெற்கில் ஊட்டி, மனித சுதந்திரங்கள், மனித உரிமைகள் யாவும் மறைமுகமாகச் சங்காரம் செய்யப்படுகின்றன என்பதே யதார்த்த நிலை.

இந்த லட்சணத்தில் தெற்கிலங்கையில், பொலீஸ் அதிகாரிகளுக்கு சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் குறித்து செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு கருத்தரங்கு நடத்தியிருப்பதாக ஒரு தகவல்.

அதனால் பலன் ஒன்றும் ஏற்படப் போவதில்லை. மனித உரிமைகளும், மனிதாபிமானமும் இங்கு கொன்றொழிக்கப்படுகின்றன என்பதை மண்டைதீவு போன்ற உதாரணங்களால் உறுதிப்படுத்தி உலகுக்கு எடுத்துரைப்பதே ஆக்கபூர்வமான பணியாக இருக்கும்.

# முல்லைத்தீவு நகரம் செயலிழந்த நிலையில்

## நகருக்குள் செல்ல மக்கள் அச்சம்

முல்லைத்தீவு, அக். 22

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரும்பாலான அரச திணைக்களங்கள், மற்றும் வங்கிகள் என்பன இயங்குவதில்லை. இதனால் முல்லைத்தீவு நகர் தொடர்ந்து ஸ்தம்பித நிலையிலேயே இருந்து வருகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையை அடுத்து முல்லைத்தீவு நகரத்தில் தற்போது படையினர் நிலைகொண்டுள்ளனர்.

இதனால் முல்லைத்தீவு நகரத்தினுள் பொதுமக்கள் எவரும் பிரவேசிக்க முடியாத நிலை நிலவுகிறது.

வங்கிகள் இயங்காததால் பொதுமக்கள் தமது காசோலைகளை மாற்ற முடியாது இன்னல்படுகின்றனர்.

இதேவேளை முல்லைத்தீவு அரசாங்க செயலகம் புதுக்குடியிருப்புக்கு இடம்மாற்றப்பட்டுள்ளது.

(இ - 6)

# பொம்மர் இரைச்சல் கேட்டு பஸ்ஸிலிருந்து பாய்ந்தனர்!

யாழ்ப்பாணம், அக். 22

பொம்மரின் இரைச்சலைக் கேட்ட பயணிகள் ஓடும் பஸ்ஸில் இருந்து பாய்ந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த மினிபஸ்ஸில் இடம் பெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

வவுனியா, பூந்தோட்டத்திலிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு பிரஸ்தாப மினிபஸ் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தது.

கொம்படி வெளிப்பாதை மழையால் பாதிக்கப்பட்டிருப்பதால் இந்தப் பகுதியைக் கடக்க மினிபஸ்ஸுக்கு அதிக நேரம் எடுத்து விட்டது.

இதனால் அடுத்த வெளிப் பகுதியாகிய வெற்றிலைக் கேணியைக் கடக்கும் போது விடிந்து விட்டது.

வெற்றிலைக் கேணிப் பகுதியால் பஸ் வந்து கொண்டிருந்த போது காலை 6.00 மணி அளவில் திடீரென பேரிரைச்சலுடன் இரண்டு பொம்மர்கள் அந்தப் பகுதியால் வந்தன.

பொம்மரின். சத்தத்தைக் கேட்ட பயணிகள் ஏதோ தாக்குதல் நடக்கப் போகிறது என எண்ணி கூச்சலிட்டவாறு பஸ்ஸிலிருந்து பாய்ந்து ஓடத் தொடங்கினர்.

சாரதி பஸ்ஸை நிறுத்திய

[4 ஆம் பக்கம் பார்க்க]

# தேவிலால் - மண்டல் கண்டங்களை சமாளித்த இந்திய அரசு ராம கண்டத்திலிருந்து தப்புமா?

## என்றுமில்லாதவாறு வி.பி.சிங் ஆட்சிக்கு நெருக்கடி நிலை

அயோத்தியில் ஸ்ரீ ராமருக்கு ஆலயம் கட்டும் பிரச்சினை இன்று இந்தியாவில் பூதாகாரமாக உருவெடுத்துள்ளது.

இம்மாத முடிவினுள், இப்பிரச்சினை காரணமாக இந்திய அரசியலில் பல எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படலாம் என்று அவதானிகள் எதிர்பார்க்கின்றார்கள்.

இது பற்றிய ஒரு கண்ணோட்டம் இங்கு பிரசுரமாகின்றது.

1948ஆம் ஆண்டு ஜனவரி 30ஆம் திகதிமாலை 5.30 மணியளவில்...... தேசபிதா காந்திஜி பிரார்த்தனை நடைபெறும் இடத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்.

அவரின் முன்னால் வந்து நின்று ஒருவன் கைகூப்பி வணங்குகின்றான். பின்னர் மறைத்து வைக்கப்பட்டிருந்த பிஸ்டலை எடுத்து காந்திஜியை நோக்கிச் சுடுகின்றான்.

ஹரே ராம் ...... என்று மூன்று முறை உச்சரித்தபடி காந்திஜி நிலத்தில் சரிகிறார். அண்ணலின் ஆவி பிரிகிறது.

ராமநாமத்தை உச்சரித்தபடி தேசபிதா மறைந்து விட்டார்.

பாகிஸ்தான் பிரிவினையை விரும்பாத இந்துமத தீவிரவாத சக்திகளே அன்று காந்திஜியின் மறைவை விரும்பின அந்தச் சக்திகள் தான் இன்று வேறு ஒரு போர்வையில் இந்தியாவின் மதசார்பின்மைக் கொள்கைக்குச் சவாலாக தலை தூக்கி உள்ளன என்று கூறப்படுகிறது.

### ராமநாமம்

காந்திஜிக்கு ஆத்மீக பலத்தைக் கொடுத்த ராமநாமத்தை இன்று இந்தியாவின் 'ஆத்மா' வையே அழிக்கும் ஓர் ஆயுதமாக இன்றைய அரசியல்வாதியின் பயன்படுத்தத் தொடங்கி உள்ளனர்.

ராமர் பிறந்த இடத்தில் தான் ராமருக்கு கோயில் கட்டவேண்டும் என்று கடந்த சில ஆண்டுகளாகக்கோரிக்கை விடப்பட்டு வந்தது.

இன்று அக்கோரிக்கை உச்சக் கட்டத்தை அடைந்து உள்ளது.

### விஸ்வ இந்து பரிஷத்

அயோத்தியில் ராமஜன்ம பூமி என்று அழைக்கப்படும் இடத்தில் முஸ்லிம்களின் புனித தலமாகக் கருதப்படும் பாப்ரி மஸ்ஜித் பள்ளிவாசல்

— தீபன் ராஜா —

அமைந்துள்ளது. அதனை உடைத்துவிட்டு, அந்த இடத்தில் ராமர் ஆலயத்தைக் கட்டவேண்டும் என்று விஸ்வ பரிஷத் முதலில் கோரிக்கை விட்டிருந்தது. அதனை பாப்ரி மஸ்ஜித் பள்ளிவாசல் நிர்வாகம் முற்றாக எதிர்த்து வருகிறது.

இதனைத் தொடர்ந்து இப்போது அப் பள்ளிவாசல் அருகில் ராமர் ஆலயத்தைக் கட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. விஸ்வ இந்து பரிஷத் இந்த முயற்சியில் தீவிரமாக ஈடுபடுகிறது. இதற்கான அரசியல் ஆதரவை பாரதிய ஜனதா கட்சி கொடுத்து வருகிறது.

1989 நவம்பரில் நடந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீராம ஜன்மபூமி பிரச்சினையை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தியே பாரதிய ஜனதாக்கட்சி வட இந்திய மாநிலத்தில் பல ஆசனங்களைக் கைப்பற்றியது; சில மாநிலங்களில் ஆட்சியையும் பிடித்தது.

அத்தேர்தலின் போது பாரதிய ஜனதாக் கட்சியுடன் தேர்தல் கூட்டு வைத்திருந்த ஜனதாதள் கட்சி மத்தியில் ஆட்சியைப் பிடித்தது.

இன்று — அயோத்தியில் ராமர் பிறந்த இடத்தில் ராமர் ஆலயத்தைக் கட்டும் திருப்பணியை விஷ்வ இந்து பரிஷத் இம் மாதக் கடைசியில் ஆரம்பிக்க உள்ளது.

இதற்கு முன்னோடியாக பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் லால் கிஷன் அத்வானி 'ராம பிரச்சினைக்கு' 'சூடேற்றும்' ரத யாத்திரையை வட இந்திய மாநிலத்தில் மேற்கொண்டு வருகின்றார்.

யாத்திரையின் உச்சக் கட்டம் இப்போது தான் வந்து உள்ளது.

புதுடில்லிநகரை வந்தடைந்துள்ள ரத யாத்திரை முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகள் ஊடாக தற்போது அயோத்தி நோக்கிப் புறப்படுகிறது.

### செய்திக்கு பின்னால்

அதே சமயம் இந்த ரத யாத்திரையை தடை செய்யும் படி தேசிய முன்னணி அரசை மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் கட்சியும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் வற்புறுத்தி வருகின்றன.

### 3அம்சத்திட்டம் நிராகரிப்பு

ராம ஜன்ம பூமி பிரச்சினைக்குத் தீர்வு காணும் இந்திய அரசின் இறுதி முயற்சியும் தற்போது தோல்வி கண்டு விட்டது.

ராமஜன்ம பூமி — பாப்ரி மஸ்ஜித் பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்திய அரசு நேற்று முன்தினம் பிறப்பித்த மூன்று அம்ச அவசரச் சட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்றுவிஸ்வ இந்து பரிஷத் அறிவித்து விட்டது.

தேசிய முன்னணி அரசு பதவிக்கு வந்த நாள் முதல் 'நித்திய கண்டம்— பூரண ஆயுசு' என்ற நிலையில் ஆட்சி நடத்தி வருகிறது.

தேவிலால் கண்டம், மண்டல் கண்டம் ஆகியவற்றை எல்லாம் சமாளித்து வரும் தேசிய முன்னணி அரசு, பாரதிய ஜனதா கட்சி தோற்றுவித்துள்ள 'ராம கண்ட'த்தையும் தாண்டுமா? இக்கேள்விக்கு இம் மாத முடிவில் பதில் தெரியவரும் என்று அவதானிகள் எதிர்பார்க்கிறார்கள்.

ராமர் ஆலயம் கட்டும் பிரச்சினையால், 'ஈஸ்வர அல்லா தேரே நாம்'— என்று அண்ணலினால் கட்டி எழுப்பப்பட்ட மதசார்பின்மை கொள்கை குலையாமல் பாதுகாக்கப்படுமா? என்பதே அடுத்த கேள்வியாக அமைகின்றது.

(இ-எ)

# கந்தபுராணக் கருவூலம்

## கனவில் தோன்றிய கந்தவேள்

சூரபன்மனின் கொடுமைக்கு அஞ்சிய இந்திரன், இந்திராணியோடு மேருமலை சென்று, ஒரு புறத்தே சிவபிரானை நோக்கித் தவம் செய்து கொண்டிருந்தபோது, பானுகோபன் இந்திர குமாரனான சயந்தனையும் ஏனைய தேவர்களையும் சிறையிட்டான்.

ஒரு தினம் துன்பத்தின் சுமை தாங்கமுடியாமல் சயந்தன் மூர்ச்சையடைந்து விட்டான். கண்கள் மூடிக்கொண்டன. சயந்தன் கண்மூடியிருந்தபோது, அவனுக்குத் திருவருள் புரிய அதுவே தக்க தருணம் எனக் கொண்டார் கந்தவேள். ஆறுமுகக்கோலத்தோடு அவனுடைய கனவிலே காட்சி தந்தார்.

### ஸ்கந்தசஷ்டி சிறப்பம்சம்

சயந்தன் கந்தவேளைக் கண்டதே இல்லை. அவன் சிறைப்பட்ட பின்னர்தானே முருகன் திருவவதாரம் நிகழ்ந்தது. ஆறுமுகமும், பன்னிரு கையுமுடைய இத்தெய்வம் யாரென யோசித்தான். ''வந்திருப்பவர் நாராயணர் அல்லர்; அவரது மேனியின் நிறம் நீலம். இவரோ அந்தி வான வண்ணர். பிரமனும் அல்லர்; பிரமனுக்கு நாலுமுகம். இவரோ ஆறுமுகத்துடன் விளங்குகிறார். ஆனாலும் இவர் அவர்களுக்கெல்லாம் மேலானவர்'' எனத் தெளிந்தான்.

கூப்பிய கையனாய் ''பெருமானே அடியேன் படுகின்ற துன்பத்தை நீக்குதற் பொருட்டு, பெருங்கருணையால் வந்து காட்சி தருகிறீர். நீர் திருமாலும் அன்று. பிரமனும் அன்று, அவர்களுக்கு மேலான சிவபெருமானும் அன்று. தேவரீர் யார்?'' எனக் கந்தவேளையே வினவினான் சயந்தன்.

புன்முறுவல் பூத்த கந்தவேள் —

சயந்தா நான் சிவகுமாரன். உனது தந்தை தமது குறையையும் உங்கள் குறையையும் எம்மிடம் முறையிட்டுக் கொண்டார். அந்த வேண்டுகோளின்படி எண்ணற்ற படைகளுடன் வந்து திருச்செந்தூரில் வீற்றிருக்கின்றோம்.

பிரமதேவரும், நாராயணரும் உனது தந்தையும் ஏனைய தேவர்களும் எம்முடன் இருக்கின்றார்கள். சூரபன்மனிடம் வீரவாகு என்ற தூதரை அனுப்பியிருக்கிறோம். அவன் சென்று நீதி நெறிகளைச் சொல்லுவான்.

ஆனால் அவற்றையெல்லாம் சூரபன்மன் கேட்கமாட்டான் என்பதும் எமக்குத் தெரியும்; நாம் நாளையே வீரகேந்திரவுரிக்கு வருவோம். போர் மூளும் சூராதி அவுணர்கள் அழிவர். தேவர்களுக்கு எல்லா நலன்களும் விளையும். சயந்தா நாம் அனுப்பியுள்ள தூதன் உன்னையும் தேவர்களையும் சந்தித்து ஆறுதல் கூறுவான்— என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார்.

— அழகு அருணாசலம்

சயந்தனுக்கு ஆறுதல் கூறியது போலவே ஆறுமுகவள்ளல் மற்றைய தேவர்களின் கனவிலும் தோன்றி ஆறுதல் கூறி மறைந்தார். கனவு நீங்கி நனவு வரப் பெற்றதும் தேவர்கள் கனவில் கண்ட கந்தவேளின் கருணையை [illegible] மூழ்கினர்;

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி, தீவுப்பகுதிகளில் நேற்றுமுதல் ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, அக் 22
கிளிநொச்சிநிர்வாக மாவட்டத்திலும் ஊர்காவற்றுறை, மண்டைதீவு, புங்குடுதீவு ஆகிய பகுதிகளிலும் அமுலில் இருந்துவந்த ஊரடங்குச்சட்டம் நேற்றுக் காலை ஆறு மணிமுதல் நீக்கப்பட்டுவிட்டதாக கொழும்பில் கூட்டுப் படைத் தலைமைச் செயற்பாட்டுப் பிரிவு அறிவித்தது.

சென்ற செவ்வாய்க்கிழமை தொடக்கம் ஊர்காவற்றுறை மண்டைதீவு, புங்குடுதீவுப் பகுதிகளிலும் —

சடந்த புதன்கிழமை தொடக்கம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்களிலும் ஊரடங்குச் சட்டம் அமுல்நடத்தப்பட்டு வந்தது.

யாழ் குடாநாட்டின் ஏனையபகுதிகளில் தொடர்ந்தும் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளது. (இ-எ)

# சந்தோஷம் நினைவு தினம் நேற்று அனுஷ்டிப்பு

அரியாலை, அக். 22
விடுதலைப் புலிகளின் திருகோணமலை, யாழ்ப்பாணம் மாவட்டங்களின் முன்னாள் தளபதி லெப்டினன்ட் கேர்ணல் சந்தோஷம் மாஸ்டரின் மூன்றாம் ஆண்டு நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இதனை முன்னிட்டு அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் நேற்று நண்பகல் அன்னதான வைபவம் இடம்பெற்றது.

பின்னர் மாலையில் ஞானவைரவர் ஆலய முன்றலில் அஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது.

அரியாலைப் பிரதேச சிற்றூரவையினர் ஏற்பாடு செய்திருந்த மேற்படிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் பலரும் உரையாற்றினர். (ஓ-6)

# காலையில் கலிபர் தாக்கு! மாலையில் பத்திரிகை வீச்சு!!

யாழ்ப்பாணம், அக், 22
நேற்றுக்காலை 10 30 மணியளவில் பண்டத்தரிப்பு, கல்வளை, சண்டிலிப்பாய்ச் சந்தி, கந்தரோடை ஆகிய பகுதிகளில் பரவலாக ஹெலிக்கொப்டர்களில் இருந்து கலிபர் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

மாலை 5 மணியளவில் இளவாலை, விளான், பண்டத்தரிப்பு, சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளில் ஹெலியிலிருந்து பத்திரிகைகள் வீசப்பட்டன.

17, 18, 19 ஆம் திகதிய —ஏரிக்கரை நிறுவன — பத்திரிகைகளே வீசப்பட்டன, (உ-3)

## மரண அறிவித்தல்கள்

### மேரி அக்னஸ் அரியநாயகம்
### Mary Agnes Ariyanayagam

அச்சுவேலி தொழிற்பேட்டை வீதியில் வசிக்கும் திருமதி மேரி அக்னஸ் அரியநாயகம் காலமானார். இவர் M.J B. அரியநாயகத்தின் அன்பு மனைவியும் ராஜேஸ்வரன், றவி, றஜி, றஜிக்கா, ராஜன், றஞ்சித், கலா இவர்களின் அருமைத் தாயாரும், றெவின்ஸ் குணராஜா, காலம் சென்ற S J. பொன்ராஜா, ராசாத்தி, ராஜினி இவர்களின் அன்பு மாமியாரும் காலம் சென்ற திரு திருமதி யோசவ் பொன்னையா அவர்களின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற J.A. ஜெகராஜா, J P. சிங்கராயர், அருட்தந்தை J.P.E. செல்வராஜா, அருட்செல்வி ஜெறோம், A C. ராணி நவமணி, ஆன்-சபீனா இவர்களின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இலக்கம் 3. றக்கா லேன் இல்லத்தில் இருந்து 22 - 10 - 90 திங்கள் மாலை 3 மணிக்கு யாழ் மரியன்னை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
M. J. B. அரியநாயகம்.
அச்சுவேலி. (14525)

### கந்தையா மார்க்கண்டு
[இளைப்பாறிய ஆசிரியர்]

குப்பிளானைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா மார்க்கண்டு [இளைப்பாறிய ஆசிரியர்] 16-10-1990 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் ஞானம்மாவின் அன்புக்கணவரும், கலாநிதி விக்கினேஸ்வரன் [Ph D. Prinston University America]. செல்வி வினோதினி [வேம்படி மகளிர் கல்லூரி மாணவி] ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி றூபா [லாலா] விக்கினேஸ்வரனின் [அமெரிக்கா] அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 17-10-1990 இல் குப்பிளான் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி மார்க்கண்டு ஞானம்மா
(மனைவி)
குருக்கள் ஒழுங்கை,
குப்பிளான். (14527)

# ரயில் விபத்து

கொழும்பு, அக். 22
கம்பஹா ரயில் நிலையத்தில் சனிக்கிழமை நள்ளிரவு இரண்டு ரயில்கள் மோதுண்டு விபத்துக்குள்ளாகின.

அதனால் இரண்டு ரயில்களும் பலத்த சேதமடைந்தன. அவை இரண்டும் சரக்கு வண்டிகளாகும். ரயில்வே பாதுகாப்பாளர்கள் இருவர் உட்பட மூவர் படுகாயமடைந்தனர்.

விபத்துக் காரணமாக வழமையான ரயில் சேவைகள் எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டது. [அ]

# மருந்துகளுடன் "சிகிரியா"

யாழ்ப்பாணம், அக். 22
400 மெற்றிக் தொன் மாமற்றும் யாழ் போதனா வைத்திய சாலைக்குத் தேவையான மருந்து வகைகளை ஏற்றிக்கொண்டு "சிகிரியா" கப்பல் நேற்று கொழும்பிலிருந்து பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்டது.

இதேவேளை—
பொருள்களை இறக்க வசதியாக பருத்தித்துறைப் பகுதியில் ஊரடங்கை தளர்த்துமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு பாதுகாப்பு அமைச்சிடமிருந்து எதுவித பதிலும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது, [ஓ-5]

# மல்லாகத்தில் ஷெல் விழுந்து இளைஞர் பலி

மல்லாகம். அக். 22
கடந்த வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் மல்லாகத்திலுள்ள மரக்காலை ஒன்றுக்கு முன்னால் விழுந்த ஷெல்லுக்கு இளைஞர் ஒருவர் பலியானார்.

தலை சிதறிய நிலையில் இவர் இறந்து கிடந்தது அடுத்த நாளே (சனிக்கிழமை) தெரியவந்தது

சி. சுரேஸ்வரன் (வயது 18) என்ற பிரஸ்தாப இளைஞர் மரக்காலையில் அரிவு வேலை செய்து வந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-ரி)

# ஷெல் தாக்கி மூவர் காயம்

யாழ்ப்பாணம், அக். 22
பலாலி இராணுவ முகாமிலிருந்து வயாவிளான் பகுதியை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல் சம்பவத்தில் ஒட்டகப்புலத்தில் 45 நாள் பெண் குழந்தை உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர்படுகாயமடைந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சுந்தரலிங்கம் கோணேஸ்வரன் (வயது 26). அவர் மனைவி கேதீஸ்வரி (வயது 24). அவர்களது குழந்தை கிரிஜா ஆகியோரே காயமடைந்தனர். (ஓ-15)

# இணுவிலில் உணவுப் பொருள் விநியோகம்

தெல்லிப்பளை, அக் 22
வலி வடக்கில் கடந்த இரண்டு மூன்று நாட்களில் இடம்பெயர்ந்தவர்களுக்கு விசேட உணவுப் பொருள் விநியோகம் ஒன்றை மேற்கொள்ள தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

இதுவரை காலமும் வேறு இடத்திற்குச் செல்லாமல் தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கப் பகுதிக்குள் இருந்து பிரஸ்தாப சங்கத்திலேயே உணவுப்பொருள்களைப்பெற்றவர்களுக்கே விசேட உணவுப் பொருள்கள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இணுவில் மஞ்சத்தடி விவேகானந்தா கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் [illegible] உணவுப் பொருள் விநியோகம் நடைபெறும். (அ)

# செஞ்சிலுவை வாகனம் மீது உரும்பராயில் ஹெலி சூடு!

உரும்பராய், அக். 22
உரும்பராய், விளாத்தியடி - கோப்பாய் வீதியில் நேற்று 2. 45 மணியளவில் ஹெலி செஞ்சிலுவைக் குறியுடன் சென்ற வாகனம் ஒன்றை நோக்கி தாக்குதல் நடத்தியது.

வாகனத்தில் இருந்தவர்கள் இறங்கி ஓடி மறைந்து கொண்டனர். வாகனத்துக்கு சேதம் ஏற்படவில்லை.

எனினும் அயலில் இருந்த 4 வீடுகளின் கூரைகள் சேதமடைந்தன.

இதேவேளை —
உரும்பராய், அன்னுங்கை, இணுவில் ஆகிய பகுதிகளிலும் நேற்று சுமார் ஒருமணித்தியாலம் ஹெலி கடும் தாக்குதல்களை நடத்தியது. (ஓ-154)

# அகதியாக ஓடியோரை தேடித் தேடித் தாக்குதல்

யாழ்ப்பாணம், அக். 22
வலி. வடக்குப் பகுதியில் இருந்து நேற்று அகதிகளாக வெளியேறி, வீதிகளில் பதற்றத்துடன் சென்ற மக்களை தேடித் தேடி ஹெலிக்கொப்டர் வேட்டுக்களைத்தீர்த்தது

நேற்று முழு நாளுமே ஹெலி பல இடங்களிலும் அகதிகளாக ஓடியோர் மீது பரவலாக தாக்குதலை நடத்தியது. இதனால் பலர் காயமடைந்தனர்.

சில்லாலையில் இம்மானுவேல் கலிஸ்டர் [வயது 24], சேந்தாங்குளத்தில் இராசதுரைஜெயக்குமார் [வயது15]. சிறுவிளான் பகுதியில் சண்டிலிப்பாயைச் சேர்ந்த சின்னராசா மேகனராசா [வயது 26]. பன்னாலையைச் சேர்ந்த சீனியர் இரட்ணராஜசிங்கம் [வயது 37] கொல்லங்கலட்டியைச் சேர்ந்த நரசிங்கம் கனகரத்தினம் [வயது 43] மற்றும்—

கட்டுவன் தெற்கில் தம்பிஐயா மனோகரன் [வயது28], மல்லாகத்தில் சின்னத்துரை யோகசீலன் [வயது 25] ஆகியோர் ஹெலிச் சூட்டினால் காயமடைந்தனர்.

இவர்கள் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். [ஓ-15]

## வலி வடக்கில்...
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மற்றொரு குண்டு தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள சயித்தைப் பகுதியில் வீழ்ந்து வெடித்ததில் சில வீடுகள் சேதமடைந்தன.

மற்றொரு குண்டு தெல்லிப்பழை கிழக்குப் பகுதியில், சைவப்பிரகாச வித்தியாசாலை ஒழுங்கையில் வீழ்ந்து வெடித்ததில் ஒரு வீடு தரைமட்டமானது அருகில் உள்ள ஐந்து வீடுகள் சேதமுற்றன.

மல்லாகம் சோடாக் கம்பனி ஒழுங்கைக்கு முன்பாக விழுந்த மற்றொரு குண்டுக்கு ஒரு வீடு பலத்த சேதமடைந்தது. அருகில் உள்ள வீடுகளும் சிறு சேதத்துக்குள்ளாகின.

ஏழாலை. ஊரங்குனைப் பகுதியிலும் சகடை விமானம் குண்டுகளை வீசியது

நேற்றுக் காலை அவ்ரோ விமானத்திலிருந்து போடப்பட்ட இரண்டு குண்டுகளினால் கொல்லங்கலட்டி வீதி ஒழுங்கையில் (உபதபால் அலுவலகத்துக்கு அருகாமையில்) இரண்டு வீடுகள் தரைமட்டமாகின. மேலும் சில வீடுகள் சேதமுற்றன.

காங்கேசன்துறை மயிலிட்டி, தையிட்டி, சிமெந்துத் தொழிற்சாலை, வீமன்காமம் பகுதிகளிலும் குண்டு வீச்சுகள் இடம்பெற்றன. (உ-3 68)

## அரியாலை...
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இயந்திரங்கள் சேதமடைந்தன.

நேற்று ஞாயிற்றுக்கிழமையாக இருந்தபோதும் அத்தியாவசிய சேவைகளுக்காக ஊழியர்கள் பலரும் அங்கு கடமைக்கு வந்திருந்தனர். அவர்கள் பதுங்கு குழிக்குள் பாதுகாப்புத் தேடியதால் உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டன.

நேற்றைய தாக்குதல் சம்பவத்தை அடுத்து யாழ். ப.நோ சங்கத் தலைமை அலுவலகம் உடனடியாக ஸ்ரான்லி வீதியில் உள்ள 15 ஆம் இலக்க கிளைக்கு (பழைய தலைமை அலுவலகம்) மாற்றப்பட்டது. (இ-5)

## பொம்மர்...
(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போது பயணிகள் எவரும் பஸ்ஸில் இருக்கவில்லை. எல்லோரும் ஓடிப் பதுங்கி விட்டனர்.

ஆனால் பொம்மர்கள் இரண்டும் தாக்குதல் எதுவும் நடத்தாது சென்று மறைந்தன. (இ-6)

# ஆனையிறவில் ஷெல் தாக்கு

யாழ்ப்பாணம், அக். 22
ஆனையிறவு தடை முகாமில் இருந்து இராணுவத்தினர் நேற்றுக் காலை குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் மற்றும் சினைப்பர் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

சினைப்பர் தாக்குதலில் குறிஞ்சாத்தீவுப் பகுதியில் ஒருவர் காயமடைந்தார். (ஓ-15)

# கைவிடப்பட்ட பொதிகள்

யாழ்ப்பாணம், அக். 22
நேற்றுக் காலை வவுனியாவில் இருந்து வந்துசேர்ந்த தனியார் மினிபஸ் ஒன்றில் பயணம் செய்தவர்களில் சிலர் தமது பெறுமதியான பொதிகளைகைவிட்டுச் சென்றுள்ளனர்.

இவற்றில் 4 பொதிகளும் 9 ஆயிரத்து 100 ரூபா பணமும், பல பெறுமதியான பொருள்களும் அடங்கும்.

இவற்றை மினிபஸ் உரிமையாளர் ஆர். விஜயரட்ணம், முத்திரைச் சந்தியில் உள்ள தனியார் மினிபஸ் சங்கக் காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். (அ-6)

## படை அணிகள்...
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சுற்றி வளைக்கப்பட்டிருக்கின்றது.

நேற்று முன்தினம் சாந்தைச் சந்தியில் வழிமறிக்கப்பட்ட இந்தப் படை அணி, நேற்று மாவிட்டபுரம் வழியாக திஸ்ஸ முகாம் நோக்கிச் செல்ல முற்பட்டபோது அந்த அணியை காங்கேசன் சிமெந்து ஆலைக் குவாறிப் பக்கத்தில் வைத்து புலிகள் சுற்றி வளைத்தனர்.

சுற்றி வளைக்கப்பட்ட இரு படை அணிகளும் பலாலி - திஸ்ஸ விகாரை முகாம்களுக்கு இடையில் சிக்கியிருப்பதாகவும் -

அவர்கள் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடத்திக் கொண்டிருப்பதாகவும் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (உ-3)

## கட்டுவன்....
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விடுதலைப் புலிகளின் தாக்குதலை அடுத்து முகாம் திரும்பினர்.

இந்த மோதலின் போது படையினருக்கு பெரும் இழப்புக்கள் ஏற்பட்டதாகவும்— புலிகள் ஆயுதங்கள்சிலவற்றை கைப்பற்றியதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஓ-8]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 22 - 10 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org